# நடப்பு நிகழ்வுகள்- ஜூலை 09 - 2017

- ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம் அருகே உள்ள பேக்கரும்பில் முன்னால் ஜனாதிபதி அப்துல் கலாமின் நினைவிடம் உள்ளது. இங்கு மத்திய அரசு பாதுகாப்புத்துறை சார்பில் ரூ50 கோடி மதிப்பில் மணிமண்டபமும் அறிவுசார் மையமும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மணிமண்டபம் திறப்புவிழாவானது அப்துல்கலாமின் இரண்டாவது நினைவு தினமான ஜூலை 27-ம் தேதி பிரதமர் மோடி திறந்து வைக்கிறார். இதில் “அக்னி” மாதிரி ஏவுகணை அமைக்கப்படுகிறது.

- கம்போடிய நாட்டில் கம்போங்தோம் மாகாணம் ஈசானபுர நகரில் உள்ள “சம்போர் பிரெய் குக்” என்ற இந்து கோயில் புராதான சின்னமாக (World Heritage Sites) ‘UNESCO’ அமைப்பு அறிவித்துள்ளது. இது 6 அல்லது 7-ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும் இந்த கோயில் 25 கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளது.

- அணு ஆயத போரை தடுப்பது தொடர்பான ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஐ.நா சபையில் சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாக முயற்சிகள் நடைபெற்று வந்தன. அதன் அடிப்படையில் பெரும்பாளான நாடுகள் அளித்த பரிந்துரையின் படி அணு ஆயுத தடை ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் குறித்த வாக்கெடுப்பில் 124 நாடுகள் பங்கேற்றன 122 நாடுகளின் ஒப்புதலுடன் நிறைவேறியது.

- 22வது “உலக பெட்ரோலிய கூடுகை 2017” (World Petroleum Congress (WPC)) துருக்கியிலுள்ள இஸ்தான் புல் நகரில் ஜூலை 10-12 ல் நடைபெவுள்ளது. இந்தியாவின் சார்பில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் கலந்து கொள்கிறார்.

- உலக அளவில் செயல்பட்டு வரும் பருவநிலை ஆராய்ச்சி நிறுவனங்களில் இரண்டாவது சிறந்த நிறுவனமாக இந்தியாவிலுள்ள “டெரி” நிறுவனம் (Energy Resources Institute (TERI)) அறிவிக்கப்பட்டுள்ளது.

- மிஷோரோம் மாநிலத்திலுள்ள ‘‘காவ்லாங் தூபி’’ (Khawthlangtuipui river) ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க இந்தியா மற்றும் வங்கதேச நாடுகள் முடிவெடுத்துள்ளன. இப்பாலம் கட்டிமுடிக்கப்படும் பட்சத்தில் இந்திய வங்கதேச நாடுகளிடையேயான உறவில் முக்கியமாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- செவ்வாய் கிரகத்தின் தரைப்பகுதியில் ‘‘பெர்குலேட்’’ (perchlorates) எனும் வேதிப்பொருள் அதிகமாக காணப்படுவதாக அறிவியல் ஆய்வாலர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த வேதிப்பொருள் அனைத்துவிதமான உயிரிகளையும் அழித்துவிடும் தன்மையுடையதாக அறியப்படுகிறது.

- MERIT செயலி (MERIT - Merit Order Despatch of Electricity for Rejuvenation of Income and Transparency) மற்றும் இணையதள சேவை மத்திய மின்சார துறை அமைச்சர் பியூஸ் கோயல் அவர்களால் வெளியிடப்பட்ட இந்த செயலியின் மூலம் மாநில அரசுகள் தங்களுக்கு தேவையான மின்சாரத்தை வாங்குவதற்கான தனியார் நிறுவனங்களை மின்-டென்டர் (e-bidding) மூலமாக தேர்ந்தெடுக்கலாம்.

- எல்லோருக்கும் கல்வி கிடைக்கும் வகையில் தொலைதூரப் பகுதியில் உள்ளவர்களுக்கும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சிறந்த கல்வி வழங்கும் வகையிலும் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை ‘‘ஸ்வயம், ஸ்வயம் பிரபா’’ ஆகிய இரண்டு திட்டங்களையும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி துவக்கி வைத்தார்.

- நாட்டிலேயே முதல் முறையாக ‘‘கிரையிங் கிளப்’’ எனப்படும் அழுவதற்கான கிளப் குஜராத் மாநிலத்தில் துவக்கப்பட்டது. இந்த கிளப்பை குஜராத் மாநிலம் சூரத் நகரில் ‘‘ஹெல்த்தி கிரையிங் கிளப்’’ எனும் பெயரில் கமலேஷ் என்பவர் துவக்கியுள்ளார்.

- உத்திரபிரதேச மாநிலத்தில் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் 50 வயதிற்கு மேற்பட்ட ஊழியர்களின் பணித்திறன் கண்காணிக்கப்படுகிறது. 50 வயது கடந்து உரிய நேரத்தில் பணிகளை முடிக்காதவர்களுக்கு கட்டாய ஓய்வு வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார்.